1990 மே 9]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே,

மாமல்லபுரத்தில் பல்லவபுரம் சுற்றுலா வளாகம் மத்திய அரசு சுற்றுலாத்துறை நிதியுதவியுடன் அமைக்கப்படும்.

வனத்துறைக்கு சொந்தமான நிலத்தை அறநிலையத் துறைக்கு சேர்த்தல்.

*5483—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் அருகிலுள்ள அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோவிலைச் சுற்றியுள்ள வனத்துறைக்குச் சொந்தமான இரண்டு ஏக்கர் நிலத்தை அற நிலையத்துறைக்குச் சேர்க்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) தற்போது வனத்துறைக்கு எவ்வளவு பணம் கோவிலிலிருந்து குத்தகையாக கட்டப்படுகிறது?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே,

(அ) இந்துசமய அறநிலையத்துறையால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000 குத்தகை தொகையாக செலுத்தப்பட்டு வருகிறது.

9.10 மணி.

திரு. வி. சே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பன்னாரி திருக்கோயில் என்பது மிகப் பெரிய கூட்டம் கூடுகின்ற திருக்கோயில். கோடிக் கணக்கிலே வருமானம் வருகின்ற கோயில். ஆகவே, திருவிழாக் காலங்களில் மக்கள் இலட்சக்கணக்கிலே வருவதாலே, அந்தக் கோயிலைச் சுற்றி, வனத்துறை நிலம் இருக்கின்ற காரணத்தால் அவற்றை உடனடியாக அறநிலையத்துறைக்குச் சொந்தமாக்க முன்வருவார்களா? வனவிலங்குகள் எல்லாம் அதிகமாகத் திருவிழாக் காலங்களில் கோவிலுக்கே வந்துவிடுகின்றன. ஆகவே, அந்த இடத்தைக் கொடுத்தால், அவர்கள் சுற்றுச் சுவர் அமைத்து பொதுமக்களைப் பாதுகாக்கின்ற நடவடிக்கை எடுப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே, இந்த பன்னாரி திருக்கோயிலினுடைய வருமானம் கோடியை எட்டவில்லை. ஆகவே, மீதமுள்ள தொகை எங்கே போகிறது என்பது எனக்குத் தெரியவில்லை. ஏறத்தாழ 40 இலட்சம் ரூபாய் அல்லது 50 இலட்சம் ரூபாய் அளவிலேதான் அந்த வருமானம் இருந்துகொண்டிருக்கிறது. அந்தக் கோயிலினுடைய நிலத்தைப் பொறுத்தவரையில், அது வனத்துறையைச் சார்ந்த நிலமாக இருந்தது. அந்தக் கோயில் இருக்கின்ற 20 ஏக்கர் நிலத்தை, கோயிலுக்கே பட்டா செய்து கொடுக்க ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது. ஆனால், அதற்கான தொகை ரூபாய் 5,000 கோயிலிலிருந்து வனத்துறைக்குச் செலுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் பட்டா செய்து கொடுக்கின்ற பணி இன்னும் நிறைவுபெறவில்லை. அது நிறைவு செய்யப்படும். இது தவிர, இன்னொரு 20 ஏக்கர் நிலம் குத்தகையாகக் கொடுக்கப்பட்டிருந்தது. 1983ஆம் ஆண்டிலேயே இது முடிவுற்றது. ஏன் அதை மேற்கொண்டு ரெனியூ செய்யவில்லை என்பது எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் அதற்கான ஏற்பாடும் செய்யப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறையைச் சார்ந்த கோயில்களிலே, சமூகநலக் காடுகளையும் பயன்படுத்துவதற்கு சில கோயில்களிலே முன் வந்திருக்கிறார்கள். அப்படி வருகின்ற போது—மரங்களை மட்டும் வித்தியாசமாக—அவர்கள் தருகின்ற மரங்களைப் பயிர் செய்கிறார்கள். அதற்கு மாறாக இலுப்பை, புளி போன்ற மரங்களை, வறட்சியைத் தாங்கக் கூடிய மரங்களை இந்து அறநிலையத் துறை மூலமாக அறிவுரை வழங்கி, இருக்கின்ற கோயில்களிலே சமூகநலத்துறையோடு இணைந்து அந்த மரங்களைப் பயிராக்கி, அதற்குத் தனியான கணக்கை இந்து அறநிலையத் துறையே கண்காணிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அப்படி ஒரு திட்டம் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றது. ஆங்காங்கே 500 ஏக்கர், 1,000 ஏக்கர் நிலம் என்று தரிசாக, புஞ்சை நிலமாக கோயிலைச் சார்ந்த நிலங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. சமூக நலக் காடுகள் வளர்ப்பதற்காக, ஆங்காங்கே நிலங்களைத் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, கோயிலைச் சார்ந்த நிலங்களிலே இலுப்பை, புளிய மரங்கள் மட்டுமல்லாமல், தொழிற்சாலைக்கு வேண்டிய யூகலிப்டஸ் மரங்களையும் வளர்க்கலாமா என்பதும் அரசினுடைய வனத்துறை, சமூகநலத்துறை ஆகிய துறைகளினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1990 மே 9]

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத்துறையைச் சார்ந்து இருக்கக்கூடிய பல்வேறு கோயில்களுக்குச் சொந்தமான இடத்தில் ஏராளமான மக்கள் 50 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கே ஒரு குறைந்த பட்ச கிரயம் வைத்து அரசு அளிப்பதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள் எந்த இடம் என்று குறிப்பிட்டுச் சொன்னால், அதற்கான நடவடிக்கை எடுக்க இந்த அரசு, அறநிலையத்துறை முன்வரும்.

9–15 மணி.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற போது, கோடியை எட்டவில்லை, லட்சத்தைத்தான் எட்டியிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், 40 லட்சம் வரை வருமானம் வரக்கூடிய அந்தக் கோயிலில், பக்தர்கள் வந்து தங்கிச் செல்வதற்கு வேண்டிய வசதிகள் இல்லை. பக்தர்கள் வந்து தங்கிச் செல்கின்ற அளவுக்கு, விடுதிகளைக் கட்டித் தருவதற்கு, 20 ஏக்கரா நிலங்களை, ஐயாயிரம் ரூபாய் பட்டா செய்து கொடுப்பதற்காக, அந்தத் துறையின் சார்பாக, அந்தக் கோயிலின் சார்பாக, கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதேபோல் பட்டா செய்து தருவது போக, மீதம் இருக்கிற நிலங்களை கல்லூரி கட்டுவதற்காகக் கேட்டிருக்கிறார்கள். அதையும் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 ஆயிரம் ரூபாய், 27–7–76 அன்றே கொடுக்கப்பட்டிருக்கிறது, அப்பொழுதே பட்டா செய்து கொடுத்திருக்கலாம், ஆனால் கொடுக்கவில்லை. அதற்குப் பிறகு 1980 ஆம் ஆண்டு மத்திய அரசு ஒரு சட்டம், இது 'கன்கரன்ட் லிஸ்ட்' என்ற காரணத்தினால், இயற்றி இருக்கிறது. ஆகவே, மத்திய அரசின் அனுமதி பெற்றுதான், இந்தச் சூழ்நிலையிலே பட்டா செய்து கொடுக்கமுடியும். அந்த அனுமதியை பெற்றுத் தரமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வனத்துறைக்குச் சொந்தமான பல கோயில்கள் இருக்கின்றன. குறிப்பாக, பன்னாரி மாரியம்மன் கோயிலைப்

போன்று ஒரு கோயிலும், வெள்ளியங்கிரி மலையில் இருக்கிறது. அந்த மலையில் பல ஏக்கரா நிலங்கள் வனத்துறைக்கு சொந்தமாக இருக்கின்றன. அங்கே, அந்தக் கோயிலுக்கு பொது வேலைக்காகத் தேவைப்படுகின்ற நிலம், இந்து சமய அறநிலையத் துறைக்கு மாற்றிக் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு மிக முக்கியமானப் பிரச்சினை. பல இடங்களில் வனத்துறை பகுதியிலே கோயில்கள் இருக்கின்றன. வெள்ளியங்கிரி மலை மீது அப்படிப்பட்ட ஒரு கோயில் இருப்பதைப் போல, மதுரையிலும் அழகர் கோவில் இருக்கிறது. வெள்ளைக்காரர்கள் காலத்திலே, இப்படிப்பட்ட கோயில்களுக்கு, தாராளமாக பட்டா செய்து கொடுத்திருந்தார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், திருச்செந்தூர் பகுதியிலே, குதிரைமேடு என்ற இடத்தில் 10 ஆயிரம் ஏக்கரா வனப்பகுதி இருக்கிறது. அப்போது அங்கிருந்த ஒரு வெள்ளைக்கார அதிகாரி, ஏதோ ஒரு இரவு ஒரு காட்சியைக் கண்டதாகவும் மறுநாளே 150 ஏக்கரா நிலத்தை அங்கே இருந்த கோயிலுக்கு பட்டா செய்து கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது. அந்த 150 ஏக்கரா நிலம் இன்றைக்கும் வனத்துறையைச் சார்ந்த நிலமாக இருந்து கொண்டிருக்கிறது. இதுபோல, இன்றைக்கும் வனத்துறை தாராளமாக நடந்துகொள்ளுமென்று எதிர்பார்க்கிறேன்.

சந்தனத் தொழிற்சாலை

* 8172 திரு. எஸ். ஆர். சிவலிங்கம் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் நகரத்தை மையமாகக் கொண்டு சந்தன தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் நகரத்தை மையமாகக் கொண்டு சந்தனத் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் நகரத்தைச் சுற்றி, ஏற்காடு, கொல்லிமலை, கல்வராயன்மலை ஆகிய பகுதிகளிலிருந்து நல்ல முதிர்ந்த சந்தன மரங்கள் சேலம் வன இலாகாவுக்குக் கொண்டு

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS